Registered as a Newspaper in Ceylon ★ விலைசதம் 10

# ஈழநாடு

EELANADU

தபாற்பெட்டி எண். 49
போன் 389

National Tamil Daily

மலர் 10
இதழ் 122
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் கீலக வைகாசி 30 ரபிஉல் அவ் 15 புதன்கிழமை (12-6-68)




# யாழ். நகர நவீனசந்தைவேலை இம் மாதத்தில் தொடங்கும்

## இரத்தவெள்ளத்தில் இறந்துகிடந்தார்

யாழ்ப்பாணம், புதன்

குத்தப்பட்ட நிலையில் இரத்தம் வெள்ளத்தில் இறந்துகிடந்தார் நாகமுத்து குலசிங்கம். இதுசம்பந்தமாக ஒருவர் பொலிஸாரால் தேடப்பட்டுவருகின்றார்.

சாவகச்சேரி பொலிஸ் பகுதியில் இச் சம்பவம் நேற்றிரவு நடைபெற்றுள்ளது. வடபகுதி பொலிஸ் தலைமைக்காரியாலயத்துக்குக் கிடைத்த செய்தியில் இறந்தவர் குத்தப்பட்ட நிலையில் வீதியில் கிடந்ததாகவும், ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்ட போது இறந்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மந்துவிலில் நடைபெற்ற இச்சம்பவம் சம்பந்தமாக கணபதி சடையன் என்பவர் பொலிசாரால் தேடப்பட்டுவருகின்றார். [கா. நி]

## பழைய இடத்தைக் காலிசெய்ய சில வர்த்தகர் தயக்கம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணநகரின் நவீன சந்தை அமைப்பதற்கான கட்டட வேலைகள் இம்மாத முடிவுக்குள் ஆரம்பமாக இருக்கின்றன.

இப்போதுள்ள சந்தையிலுள்ள வர்த்தகர்களுக்கு சந்தையின் கிழக்குப் பக்சத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கட்டிடத்தில் இடம் ஒதுக்கப்பட்டு விட்டன. சில வர்த்தகர்கள் புதிய இடத்தில் வியாபாரம் செய்யத் தொடங்கிவிட்டனர். ஆயினும் மற்றும் சிலர் தங்களுடைய பழைய இடங்களை விட்டுப் போகமுடியாதென்றும் இதற்கு மாநகரசபை இப்போது விசேஷ ஆணையாளர்களின் நிர்வாகத்திலிருப்பதால் அவர்களுடன் செய்து கொள்ளும் உடன்படிக்கை பின்னர் செல்லுபடியாகாமற் போய்விடுமென்ற அச்சம்தானென்றும் கூறப்படுகிறது. ஆனால் புதிய சந்தை கட்டுவதற்கான வேலைகள் ஆரம்பமானதும் வர்த்தகர்கள் தங்கள் இடங்களை விட்டுக் கிளம்பி அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட புதிய இடங்களுக்குப் போய்ச் சேரத்தான் வேண்டுமென்று மாநகரசபைக் கமிஷனர் அறிவித்திருப்பதாகவும் தெரியவருகிறது.

## இன்று வருகின்றனர்

கொழும்பு, புதன்

இந்திய சர்வோதய இயக்கத் தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணனும் கவியோகி சுத்தானந்த பாரதியும் இன்று வருகின்றனர். திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் இன்று காலை இரத்மலானை விமான நிலையத்துக்கு 10-30 மணியளவில் விமானத்தில் வந்து சேருவார். கவியோகி சுத்தானந்த பாரதியார் இன்று காலை 10-மணிக்கு விமானத்தில் பலாலி விமான நிலையத்தை வந்தடைவார்.

## சான்றிதழ்கள் கிடைக்கும்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் மாநகர சபையினர் மாதந்தோறும் அளிக்கும் பௌர்ணமி கலை நிகழ்ச்சிகளில் நிகழ்ச்சிகள் அளிப்பவர்களுக்கு நற்சான்றிதழ் வழங்கப்படவிருக்கின்றது. இதனை மாநகர சபை விசேஷ ஆணையாளர்கள் தீர்மானித்துள்ளனர். (கா.நி.)

## "ஜி. ஸி. ஈ. உயர்வகுப்பு நிறுவிஉதவுக"

யாழ்ப்பாணம், புதன்

"செங்குந்த இந்துக்கல்லூரியில் எத்தனையோ ஏழைப் பிள்ளைகள் எவ்வித கஷ்டமுமின்றி கல்வி கற்று இன்று நல்ல நிலையில் இருக்கின்றனர். இங்கிருந்து ஆண்டு தோறும் பல மாணவர் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்படுகின்றனர். சென்ற ஆண்டு நடைபெற்ற பல்கலைக்கழக இறுதிப் பரீட்சையில் இக்கல்லூரியைச் சேர்ந்த ஆறு மாணவர் சித்தி பெற்றுக் கலைப்பட்டதாரிகளாக வெளியேறியுள்ளனர். விஞ்ஞானம் பயில விரும்பும் மாணவர்களுக்காக க. பொ. த. ப. உயர்தர விஞ்ஞான வகுப்பொன்றையும் ஏற்படுத்த வேண்டும். இச்சுற்றாடலிலுள்ள ஏழை மாணவர்கள், விஞ்ஞானபட்டதாரிகளாகி நாட்டிற்குத்

[6-ம் பக்கம் பார்க்க]

அடையாள அட்டைக்கருத்தரங்கு

## "தமிழர் கள்ளத்தோணிஎன்ற சந்தேகத்தைப்போக்கும்"

### உடுவில் எம். பி. விளக்கம்

உடுவில், செவ்வாய்

'ஒருவர் உரிமையோடு சட்டபூர்வமான குடிமகனாக இலங்கையில் வாழ்கிறார்என்பதை ருசுப்படுத்தவே சகல மக்களுக்கும் அடையாள அட்டைகள் வழங்கப்பட இருக்கின்றன. தமிழ்மக்களுடைய பெயர்கள் சில சில சமயங்களில் கள்ளத்தோணிகள் என்ற சந்தேகத்தை அதிகாரிகளுக்கு ஏற்படுத்தலாம். அந்த ஐயுறவை நீக்க அடையாள அட்டைகள்வழிவகுப்பதாய் அமையும்'

உடுவில் கிராமசபை மண்டபத்தில் இன்றுமாலை நடைபெற்ற அடையாள அட்டைகள் மசோதாபற்றிய கருத்தரங்கில்மசோதாவின் விளக்கத்தை எடுத்துக்கூறிய உடுவில் தொகுதி எம்.பி. திரு. வி.தர்மலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

இக்கருத்தரங்க விழாவிற்கு கிராமசபைஉறுப்பினர்திரு. எஸ்.ரி நடராசாதலைமைவகித்தார். உடுவில் எம்.பி. திரு. வி. தர்மலிங்கம் தொடர்ந்து பேசியதாவது:—

1959-ம் ஆண்டில் செல்வநாயகம், பொன்னம்பலம் ஆகியோர் அடங்கியகுழு பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியில் இருக்கையில் இந்நாட்டில் வசிக்கும் சகல வாக்காளர்களுக்கும் அடையாள அட்டைகள் வழங்கப்படவேண்டும் என பிரஸ்தாபிக்கப்பட்டது. அன்று இரு கோஷ்டியினரும் அதை ஏற்றுக்கொண்டனர். இன்று ஆட்சியில இரு கோஷ்டியினரும் அங்கம் வகிக்கையில் ஒருசாரார்இம்மசோதாவை எதிர்ப்பது ஏன் என்று தெரியவில்லை.

திரு. எம் ஆலாலசுந்தரம் பேசுகையில் கூறியதாவது:-

டாக்டர் டபிள்யு. தஹநாயகா பிரதமராக இருந்த சொற்பகாலத்தில்கொண்டு வரப்பட்ட நாடுபூராவும் ஒரேநாள் தேர்தல்முறை, மைபூசல்மூலம் வாக்களிப்பு, போன்றவற்றோடு அடையாள அட்டைகள் வழங்குவதும் கொண்டு வரப்பட்டது. ஆனால் அவரது ஆட்சிக்காலம் மிககுறுகியமையால் இம்மசோதா அமுல் செய்யப்படாமல் விடப்பட்டுவிட்டது.

உடுவில் கிராமசபை அக்கிராசனர் திரு.ச.முத்துலிங்கமும் மற்றும் கிராமசபை உறுப்பினர்களும் கருத்தரங்கில் கலந்துகொண்டனர். எஸ். ஆறுமுகம் உட்பட பொதுமக்கள் பலரும் இக்கருத்தரங்கில் பங்குபற்றினர்.

## புதுடில்லியில் சபாநாயகர்

புதுடில்லி, ஜூன் 11

இலங்கை மக்கள் பிரதிநிதிகள் சபையின் சபாநாயகர் திரு. ஷேர்லி கொரியா இன்று புதுடில்லி வந்து சேர்ந்தார்.

யாழ். ஆஸ்பத்திரியில் அவலநிலை

## பிரேத பரிசோதனை செய்ய டாக்டர் இல்லை

### காரைநகருக்கு காரில் சென்று அழைத்துவந்தனர்

யாழ்ப்பாணம், புதன்

பிரேதபரிசோதனைசெய்ய டாக்டர் இல்லாததால் டாக்டரை அழைத்துவர இறந்தவரின் உறவினர்கள் சுமார் 14 மைல் தூரம் காரில் பிரயாணம் செய்ய வேண்டியிருந்தது. இது மட்டுமின்றி சடலம் சுமார் 6 மணி நேரம் தாமதமாகியே பிரேத பரிசோதனையும் செய்யப்பட்டது.

இந்த அவலமான நிலை யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில்நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இறந்த வாலிபர் ஒருவருக்கு பிரேத பரிசோதனை நடாத்த மரண விசாரணை அதிகாரி உத்தரவிட்டும், பிரேத பரிசோதனை செய்யும் டாக்டர் இங்கு நிரந்தரமாக இல்லாததாலேயே இப்பிரச்னை ஏற்பட்டது.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் சட்டவைத்திய அதிகாரியாகக் கடமையாற்றிய டாக்டர் சுப்பிரமணியம் வேறு இடத்துக்கும் இடமாற்றம் செய்யப்பட்டும் இவருக்காக எவரும் இங்கு நியமிக்கப்படவில்லை. தற்காலிக பிரேத பரிசோதனை சக்டரான திரு. வைத்தியலிங்கம் காரைநகரில் இருக்கின்ற போதும், அவருக்குத் தொலைபேசி வசதியில்லாததாலேயே நேற்றுமுன்தினம் காரில் காரைநகருக்குச் சென்று யாழ்ப்பாணம் அழைத்துவர வேண்டியிருந்தது. [(கா. நி.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

நம்பிக்கை உள்ளவர்க்குப் பகவான் இருக்கிறார். என்பதே. அவர் யாவர்க்கும் பசவும் ஆகிறார், அவர் நம்மிடம் இருக்கிறார். எனினும் நமக்குமேலுள்ளார் அறி நமக்குஅப்பாலுகிளார். யாமை அவரது மன்னிப்புக்கு ஏதுவாகாது. எனினும் அவர் எப்போதும் மன்னிக்கும் இயல் புடையவரே.

—மகாத்மாகாந்தி

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegram: EELANAD Jaffna
Post Box, 49 Jaffna
Telephone 389

சௌமிய வருஷம் வைகாசி மாதம் 30-ந்திகதி
(12-6-68)

## திரு. ஜெயப்பிரகாஷ் விஜயம்

இன்று இலங்கைக்கு விஜயம் செய்யும் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணனை, "வருக வருக" என நல்வரவு கூறி வரவேற்கிறோம்.

இலங்கையில் ஒரு வார காலம் தங்கியிருக்கவிருக்கும் திரு ஜெயப்பிரகாஷ் நாராயண் யாழ்ப்பாணத்துக்கும் வருகை தர வேண்டும் என்பதே யாழ்ப்பாண மக்களின் வேணவா. அவர்களின் அவா நிறைவேறும் என்று எதிர்பார்ப்போம்.

திரு. ஜெயப்பிரகாஷ் இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு பல தடவை சிறை சென்ற தியாகி. அகில இந்திய காங்கிரஸில் செல்வாக்குப் பெற்றிருந்த திரு. நாராயண் கருத்து வேறுபாடு காரணமாக காங்கிரஸிலிருந்து விலகி சோஷலிஸ்ட் கட்சியை ஸ்தாபித்தார். காங்கிரஸிலிருந்த போதும் காங்கிரஸைவிட்டு வெளியேறிய போதும் அவருக்கு தேச மக்களின் ஆதரவு நிறைய இருந்தது. ஏழை, எளிய மக்களுக்காகவும் பாட்டாளிகளுக்காகவும் அவர் அரிய தொண்டுகள் பல செய்தார். அரசியலில் தீவிரமாக ஈடுபட்டிருந்த காலத்திலும் சரி அரசியலைத் துறந்து சர்வோதய இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டுள்ள இச்சமயத்திலும் சரி இந்திய மக்களுக்கு தலைமை தாங்கி வழி நடத்தும் ஆற்றலுள்ளவர் அவர் என்பதே இந்திய மக்களின் கருத்து. நேரு மறைந்ததும் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் பிரதமராகப் பதவி பேற்க வேண்டுமென ராஜாஜி முதலிய பெரியார்கள் கோரிக்கைவிடுத்தனர். இன, மத, அரசியல் பேதங்களின்றி இந்திய மக்கள் அனைவரினதும் அன்பைப் பெற்றுள்ள திரு ஜெயப்பிரகாஷ் நாராயண் இன்றும் கூட உயர்ந்த பதவியிலிருக்க முடியும். ஆனால் பதவியையும் பட்டத்தையும் அவர் விரும்பவில்லை. நாட்டு மக்களுக்கு உண்மையான சேவை செய்வதும் உலக சமாதானத்துக்கு உழைப்பதும்தான் அவரது இலட்சியம்.

அரசியல்வாதியாக இருந்தால்தான் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் சேவை செய்ய முடியுமென்ற கருத்தைப் பொய்ப்பித்தவர் திரு. நாராயண். சர்வோதய இயக்கத்தின்மூலம் அளப்பரிய சேவை செய்து வரும் திரு. நாராயணனின் இலங்கை விஜயம் இங்கு புதிய விழிப்பையும் நமது அரசியல் வாதிகள் மத்தியில் புதிய திருப்பத்தையும் ஏற்படுத்த பெரிதும் உதவ வேண்டும். இலங்கை சிறிய நாடாக இருப்பினும் பிரச்னைகள் பல நிறைந்த நாடாக ஆக்கப்பட்டுள்ளது. இங்கு சமூக ஐக்கியத்துக்கும் நாட்டின் முன்னேற்றத்துக்கும் செய்ய வேண்டிய பணிகள் பல உள. திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணனின் இலங்கை விஜயம் இங்கு சர்வோதய இயக்கத்துக்கு புத்துயிரளிக்க உதவ வேண்டும்.

# இன்று இலங்கை வரும் திரு. ஜெயப்பிரகாஷ்

இந்திய சர்வோதய இயக்கத்தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் இன்று இலங்கைக்கு விஜயம்செய்கிறார். நாரஹேன்பிட்டியில் நடைபெறும் மகாநாடு ஒன்றில் கலந்துகொள்வதற்காக இன்று முற்பகல் 10-30க்கு இரத்மலானை விமானநிலையத்தில் வந்திறங்கும் திரு. நாராயண் இலங்கையில் சுமார் ஒரு வாரகாலம் தங்கியிருக்கவிருக்கிறார்.

மகாத்மா காந்தி பிறந்த மாநிலத்தில் பிறந்த திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் காந்திஜியைப் போலவே ஏழை எளிய மக்களின் நண்பராவார். மக்கள் சேவையே மகேஸ்வரன் சேவையெனக் கருதுபவர். அரசியலில் பெரும் செல்வாக்குப் பெற்றிருந்தும் அரசியலைத் துறந்து சர்வோதய இயக்கத்துக்குத் தலைமை தாங்கி இந்திய மக்களுக்கு அளப்பரும் சேவைகளை ஆற்றிவருகிறார்.

1902-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 11-ந் திகதி பிறந்த திரு ஜெயப்பிரகாஷ் பீகார் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றார். அகில இந்திய தேசிய காங்கிரஸில் அங்கம்வகித்த இவர் காங்கிரஸின் சோஷலிஸப் பிரிவுக்குத் தலைமைதாங்கினார். ரெயில்வே ஊழியர் சங்கம், தபால் தந்தி ஊழியர் சங்கம் ஆகியவற்றின் தலைவராகவும் பணிபுரிந்த திரு. நாராயண் கிராமநல அபிவிருத்தியிலும் அக்கறை செலுத்தினார். ஏழை எளிய மக்களினதும் பட்டாளி மக்களினதும் [தோழனாக விளங்கிய திரு. நாராயண் இந்திய காங்கிரஸ் கமிட்டி அங்கத்தவராகவும் கடமையாற்றினார். கருத்துவேறுபாடு காரணமாக காங்கிரஸிலிருந்து வெளியேறிய திரு. ஜெயப்பிரகாஷ் இந்திய சோஷலிஸ்ட் கட்சியை ஆரம்பித்தார்.

இந்தியாவில் சக்திவாய்ந்த எதிர்க்கட்சியாக தமது சோஷலிஸ்ட் கட்சியை திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் உருவாக்கினார். ஆயினும் 1957-ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் அரசியலைத் துறந்து சர்வோதய இயக்கத்தில் தம்மை அர்ப்பணித்தார்.

இந்தியா முழுவதிலும் சுற்றுப் பிரயாணம் செய்து சர்வோதய இயக்கப் பணி புரிந்துவரும் திரு ஜெயப்பிரகாஷ் இந்தியாவிலும் உலகிலும் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காகப் பணி புரிந்து வருகிறார். உலக சமாதானப் படையொன்றை ஆரம்பித்த திரு. நாராயண் நாகாலாந்து சமாதானக் குழுவிலும் பணியாற்றியிருக்கிறார். பஞ்சாயத்து பரிஷத்தின் தலைவராகவும் பணி புரிந்த திரு நாராயணனின் அரிய சேவைகளை கௌரவித்து பிலிப்பைன்ஸின் முன்னைநாள் ஜனாதிபதியான மக்ஸேஸ பரிசு 1965-ம் ஆண்டில வழங்கப்பட்டது. சோவியத் யூனியன் மேற்கு ஜேர்மனி அமெரிக்கா' ஜப்பான் ஆகிய பல நாடுகளிலும் திரு நாராயண் சுற்றுப் பிரயாணம் செய்திருக்கிறார்



அகில இலங்கை அரசினர்

## தமிழ் தட்டெழுத்தாளர் யாழ். நகரில் கூடினர்

உடுவில், செவ்

"கல்வி பொதுத் தராதர பத்திர (சாதாரண) பரீட்சைக்குரிய தட்டச்சு வினாப் பத்திரம் அச்சியந்திரத்தில் அச்சிடப்பட்டு வழங்கப்படுகிறது. ஆனால் தமிழ் தட்டெழுத்தாளர் கீழ்த்தரா (யர்தர) பரீட்சைக்குரிய வினாப்பத்திரம் அச்சு இயந்திரத்தில் அச்சிடப்படாமல் தட்டச்சு பொறியினால் தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகிறது. தட்டச்சு பொறியில் தயாரிக்கப்பட்டு வழங்கப்படுவதால் அனேக குறைகள் அதில் காணப்படுகின்றன. எழுத்துகள் தெளிவின்மையும், வசனத்துக்கு வசனம் இடைவெளி விடப்படாமலும் தயாரிக்கப்படுவதால் பரீட்சார்த்திகள் பெரிதும் கஷ்டமடைகிறார்கள். இக் கஷ்டத்தை நீக்க கல்விப் பொதுத் தராதர [சாதாரண] பரீட்சைக்கு வழங்குவதைப் போல இப்பரீட்சை பத்திரமும் அச்சியந்திரத்தினால் அச்சிடப்பட்டு வழங்கப்படல் வேண்டும். அத்துடன் அச்சுகள் 12 பொயின்ட் உள்ளவைகளாக இருக்க வேண்டுமெனவும் வேண்டுகிறோம்."

தமிழ் தட்டெழுத்தாளர் சங்கத்தின் இரண்டாவது ஆண்டு பொதுச்சபைக் கூட்டம் யாழ்ப்பாணத்தில் இன்று நடைபெற்ற போது மேற்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

மேற்படி கூட்டத்திற்கு திரு சி. சிதம்பரநாதன் தலைமை வகித்தார்.

தமிழ் அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளையின் செயலாளர் திரு. எஸ். பஞ்சலிங்கம் [illegible] சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.

புதுவருடத்திற்குரிய உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்:- திரு. நா. சண்முகலிங்கம்

உபதலைவர்கள்:- திருவாளர்கள் எஸ். மதியாபரணம் எஸ். சிதம்பரநாதன்.

செயலாளர்:- திரு. எம். பாலகிருஸ்ணன்.

உபசெயலாளர்:- திரு எம். சிங்கராயர்.

பொருளாளர்;- திரு. இ பரமகுரு.

கணக்காய்வாளர்:- திருமதி. வள்ளிப்பிள்ளை,

மேலும் 9பேர் அடங்கிய நிர்வாக சபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

### இன்று

யாழ்ப்பாணம், புதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் பூங்காவனம் இன்று நடைபெறுகிறது. பகல் 12 மணிக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும், இரவு விசேஷ நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## நாட்டிலும் நகரிலும்

எல். எஸ். டி. என்ற பயங்கரமான போதை மருந்து இலங்கைக்கும் வரத்துவங்கிவிட்டதாம் என்ற செய்தியை சில ஆங்கிலப் பத்திரிகைகளில் பார்த்தவுடன். 'இனிமேல் ஆண்டவனும் எம்மைக் காப்பாற்றமுடியாது' என்று கூறத்தான் தோன்றியது.

'லைசேர்ஜிக் அசிட் டைதெலமைட' என்ற ரசாயனச் சரக்கின் சுருக்கம் தான் எல். எஸ். டி. இது மதுபானங்களைப்போல் வெறும் போதையைத் தரும் மருந்தல்ல. நரம்புகளுக்கு தற்காலிகமான உதம்வகத்தையும் மனத்துக்கு தீவிரமான கற்பனை சக்தியையும் கொடுத்து, அதை உட்கொள்பவர்களுக்கு இவ்வுலக துன்பங்களையும் தொந்தரவுகளையும் மறந்து ஒரு கனவு உலகத்தில் சஞ்சாரம் செய்யும் பிரமையை இது கொடுக்கும். அத்துடன் நின்று விட்டால் பரவாயில்லை.

அதை உட்கொள்ளும் சிலர் மிகவும் கேவலமான, கோரமான, பைத்தியமான, பயங்கரமான நடவடிக்கைகளிலும் இறங்கி விடுகிறார்கள்.

அதை உட்கொண்ட ஒரு கல்லூரி மாணவன் மணிக்கணக்காக சூரியனை முறைத்துப் பார்த்துக்கொண்டு 'அதனுடன் ஒரு மதசம்பந்தமாக சம்பாஷணை நடத்துகிறேன்' என்று கூறினான். இந்த அதிசயமான சம்பாஷணைக்குப்பின் அவன் வாசிக்கும் பார்வையை இழந்துவிட்டான்.

இன்னொருவன் தான் கற்பனையில் கண்ட காட்சிகளை சகிக்கமுடியாமல் கண்களைத் தோண்டியெடுத்து தன்னைக் கொல்ல முயன்றான்.

இருபள்ளி மாணவர்கள் (வயது பதின்மூன்று) இந்த வஸ்துவை உடகொண்டால் சூராதி சூரர்களாகலாம் என்று நினைத்து அதைச் சாப்பிட்டுவிட்டு கார் திருட்டில் ஆரம்பித்து கொள்ளை, கொலை எல்லாம் புரிந்து கடைசியில் மின்சார நாற்காலியில் மாண்டனர்.

இவையெல்லாம் (அ) நாகரீகத்துக்குப் பேர் போன அந்த அமெரிக்காவில் நடந்தவை. 'விழித்தெழு' என்ற தமிழ்ப் பத்திரிகை இந்தத் தகவல்கள் எல்லாவற்றையும் தருகிறது.

இந்த எல். எஸ். டி. யுடன் கூட பார்பைட்டுரேட், ஆம்பெட் டமைன், கொக்டெயிஸ், ஹீரோயின், மரிஜூவானா எனும் பல கொடிய போதை மருந்துகளும் அந்நாட்டில் தாராளமாக கிடைக்கின்றன. கல்லூரி விளையாட்டு மைதானங்களிலும் கலாசாலை விடுதிகளிலும் மாணவரும் மாணவியரும் அவற்றை சகஜமாக உபயோகிக்கின்றனர்.

பிரதிவருடமும் சுமார் ஆயிரம் கோடி மாத்திரைகள் மருத்துவத்துக்கென தயாரிக்கப்பட்டு அதில் அரைவாசி வேறு சட்ட விரோதமான தேவைகளுக்கு பயன்படுத்தப்படுகின்றனவாம்.

நம் நாட்டில் ஏற்கனவே மனிதரின் உடலையும் உள்ளத்தையும் புத்தியையும் நரம்பையும் கெடுக்கும் போதை வஸ்துகள் தாராளமாக கிடைக்கும் வகையில் ஏராளமாக கிடைக்கின்றன. கசிப்பு. கஞ்சா, அபின் எல்லாம் வேண்டுவோர்க்கு வேண்டியது கிட்டும். எல்லாவற்றிற்கும் மேலாக நமது சாராய அரசாங்கம் தயாரித்து வெளிவிடும் கல்லோயா சாராய

[4-ம் கலம் பார்க்க]

(5-ம் கலத் தொடர்ச்சி)

யத்திலேயே தேகத்துக்கு விரோதமான பல வஸ்துக்கள் இருப்பதாக தெரிந்தவர்கள் கூறுகிறார்கள்,

கள்ளச் சாராயத்தையும் கஞ்சா அபினையும் கட்டுப்படுத்தமுடியாத பொலிஸும் கலால் பகுதியும் எல், எஸ். டி. யும் மரிஜூவானாவும் இங்கு வந்துவிட்டால் என்ன செய்யப் போகிறதோ தெரியவில்லை.

இப் புதிய படையெடுப்பை தடுப்பதில் அரசாங்கம் மிகத் தீவிரமான நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லாவிட்டால் நமது [illegible] பட்டுப் போவது நிச்சயம்.

—வழிப்போக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்டின் லூதர் கிங்கை கொலை செய்த குற்றம்

## ஜேம்ஸ் ஏள்றே மீது வாரண்ட் பிறப்பிக்கப்பட்டது

வாஷிங்டன், ஜுன் 11

அமெரிக்க நீக்ரோத் தலைவரான மார்டின் லூதர் கிங்கைக் கொலைசெய்ததாகக் கூறப்படும் ஜேம்ஸ் ஏள் றே என்பவர் மீது கொலைக் குற்றத்துக்கான வாரண்டை அமெரிக்கா பிறப்பித்துள்ளது.

ஜேம்ஸ் ஏள் றே, தற்போது லண்டனில் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

அவரை பிரிட்டனிலிருந்து நாடு கடத்துவதற்கான உத்தியோக பூர்வமான கோரிக்கையை அமெரிக்கா பிரிட்டனிடம் இன்னும் இரண்டொரு தினங்களில் விடுக்கவிருக்கிறது.

# 'காஷ்மீர் இளவரசி' விமான விபத்துச்சம்பவம்

## சதிபற்றி சீனப்பிரதமர் முன்கூட்டியே அறிந்திருந்தார்

பீகிங், ஜுன் 11

சீனச் செங்காவலர் பத்திரிகையொன்றில் வெளியாகியிருக்கும் ஒரு தகவலின்படி 1955-ம் ஆண்டில், தெற்குச் சீனக்கடல் மீது விழுந்து நொறுங்கிய 'காஷ்மீர் இளவரசி' என்ற இந்திய டக்கோட்டா விமான விபத்துச் சம்பந்தமான சதித்திட்டம் சீனப் பிரதமர் திரு. சூ-என்-லாய்க்கு முன் கூட்டியே தெரியுமென்று கூறப்பட்டுள்ளது.

சீனப்பிரதமர் இது பற்றி அப்போதைய உதவி வெளிவிவகார மந்திரியிடம் தெரிவித்திருந்தாராம். ஆனால் அம்மந்திரி எவ்வித நடவடிக்கையும் எடுக்கத்தவறிவிட்டார்.

இவ்விமான விபத்தில், முதலாவது ஆசிய-ஆபிரிக்க மகாநாட்டுக்குச் சென்று கொண்டிருந்த சீன தூது கோஷ்டியைச் சேர்ந்த 11 பேரும், விமானச் சிப்பந்தி ஒருவரும் உயிரிழந்தனர்.

# யூகோஸ்லாவியாவில் மாணவர் பிரச்னை

## டிட்டோ உரைக்கு உடனடிப் பலன்

பெல்கிறேட், ஜுன் 11

பெல்கிறேட் பல்கலைக் கழகம் இன்று மீண்டும் தனது வகுப்புகளை ஆரம்பிக்கவிருக்கின்றது.

ஒரு வாரமாக பெல்கிறேட் பல்கலைக்கழக மாணவர்கள் வேலைநிறுத்தம் செய்து வந்தனர்.

மாணவர்களின் கோரிக்கைகளை அளிப்பதற்கும் அவர்களது பிரச்னைகளை தீர்ப்பதற்கும் தாம் விரைவில் நடவடிக்கைகள் எடுப்பதாக யூகோஸ்லாவிய ஜனாதிபதி டிட்டோ நேற்று டெலிவிஷனில் பேசுகையில் உறுதியளித்ததைத்தொடர்ந்து 18 மணி நேரத்துக்குள் பெல்கிரேட் பல்கலைக்கழக மாணவர்கள் வகுப்புகளுக்குத் திரும்பவும் செல்வது எனத் தீர்மானித்தனர்.

ஐ. நா. பிரதான அரசியல் கமிட்டியில்

# அணு ஆயுத பரவல் தடை நகல் ஒப்பந்தம் நிறைவேறியது

நியூயோர்க், ஜுன் 11

ரஷ்யாவும் அமெரிக்காவும் இணைந்து உருவாக்கிய அணு ஆயுத பரவல் தடை நகல் ஒப்பந்தம் ஐ. நா. பொதுச்சபையின் பிரதான அரசியல் கமிட்டியில் பெரும்பான்மை வாக்குகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ஏழுவார விவாதத்துக்குப் பின் நேற்று ஒப்பந்தத்தின் மீதுவாக்கெடுப்புநடைபெற்றது. ஒப்பந்தத்தை ஆதரித்து 92 வாக்குகளும் எதிர்த்து 4 வாக்குகளும் அளிக்கப்பட்டன. இந்தியா உட்பட 22 நாடுகள் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

அல்பேனியா, கியூபா, தான்சானியா, ஸாம்பியா ஆகியவையே ஒப்பந்தத்தை எதிர்த்து வாக்களித்த நான்கு நாடுகளுமாகும்.

ஆயுதப் போட்டிக்கு முடிவு காணவும் பொதுப் படைக் குறைப்புக்கு வழி கோலவும் விரைவில் நடவடிக்கைகள் எடுக்குமாறு ஜெனீவா படைக் குறைப்பு மாநாட்டைக் கோரும் ஒரு தீர்மானமும் கமிட்டியினால் நிறைவேற்றப்பட்டது.

## பகைநாகர்களுக்கு எச்சரிக்கை

புதுடில்லி, ஜுன் 11

பகைநாகர்கள், அரசாங்கத்துடன் செய்துகொண்ட உடன்படிக்கையை மீறி, ஆயுதங்களை வைத்திருந்தால், அதன் விளைவுகளை அவர்களே ஏற்கவேண்டி வருமென இந்திய அரசாங்க அதிகாரி ஒருவர் எச்சரித்துள்ளார்.

சீனாவில் பயிற்சி பெற்று விட்டுத் திரும்பியுள்ள சுமார் 400 பகைநாகர்கள், கிராமங்களிதோறும் புகுந்து கிராம வாசிகளுடன் தொடர்புகொண்டு, அவர்களைத் தமது நோக்கங்களுக்குப் பயன்படுத்த முயலுவதாக அவர் தெரிவித்தார்.

இன்னும் 1000 தொடக்கம் 2000 பகைநாகர்கள், சீனாவில் பயிற்சிபெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பகைநாகர்களின் நடவடிக்கைகளை முறியடிக்க மதி... ப் படை

## வியட்கொங் தாக்குதல்

### 10 பேர் பலி

சைகோன், ஜுன் 11

வியட்கொங்கியர், நேற்றுத் தென்வியட்னாம் தலைநகரான சைகோன்மீது நடத்திய இரண்டாவதுதொடர்ச்சியான தாக்குதலில், 10 பேர் உயிரிழந்தனர்.

# பிரான்ஸில் மாணவரும் பொலீஸாரும் மீண்டும் மோதல்

## பொதுத் தேர்தலுக்கான பிரச்சாரம் ஆரம்பம்

பாரிஸ், ஜுன் 11

பிரான்ஸில், மீண்டும் பொலிசாருக்கும் மாணவர்களுக்குமிடையே மோதல்கள் நடைபெற்றுள்ளன.

நேற்று பாரிஸில், ஆயிரக்கணக்கான மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். கலகப் பொலிசார் அவர்களை அடக்கச்சென்றபோது இருதரப்பினரிடையேயும் மோதல் ஏற்பட்டது.

மாணவர்கள், பொலிஸ் நிலையம் ஒன்றைத்தாக்கினர் பொலிஸ் வாகனங்களுக்கு அவர்கள் தீ வைத்தனர்.

பிரான்ஸில் விரைவில் நடைபெறவிருக்கும் பொது தேர்தலுக்கான தேர்தல் பிரசாரம், நேற்று உத்தியோகபூர்வமாக ஆரம்பமாகியது.

பிரான்ஸில் இன்னும்பத்து லட்சம் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் தொடர்ந்து ஈடுபட்டுவருகின்றனர். ரேடியோ, டெலிவிஷன், மோட்டார் உற்பத்தித் துறைகள் ஆகியனவே இன்னும் வேலைநிறுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

## இந்திய எல்லைகளில் இந்திரா

புதுடில்லி, ஜுன் 11

எல்லைப்பகுதிகளுக்கு விஜயஞ்செய்த இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி, இந்தியாவைப் பலமான நாடாக்குவதற்கு உதவியளிக்கவேண்டுமென்று மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

நாட்டின் எல்லைகளைப் பாதுகாப்பதில் ஜவான்களின் உறுதியைப் பாராட்டுவதாகவும் திருமதி இந்திரா கூறினர்.

## பெல்கிரேடில் இந்திய ராஷ்டிரபதி

பெல்கிரேட், ஜுன் 11

இந்திய ராஷ்டிரபதி டாக்டர் சாகிர் ஹுசெயின், நேற்று பெல்கிரேட் வந்து சேர்ந்தபோது பல்லாயிரக் கணக்கான மக்கள் தெருக்களில் கூடிநின்று அவருக்குச்சிறப்பான வரவேற்பை அளித்தனர்.

டாக்டர் ஹுசெயின், யூகோஸ்லாவிய ஜனாதிபதி மார்ஷல் டிட்டோவுடன், இன்று முறையான பேச்சு வார்த்தைகளை நடாத்துவார்.

இப்பேச்சு வார்த்தைகளின்போது, மண்டல சார்பற்ற கொள்கை, இந்திய—யூகோஸ்லாவிய உறவுகள், மேற்கு ஆசியா ஆகிய விஷயங்கள் ஆராயப்படுமெனத் தெரிகிறது.

நேற்றிரவு, ஜனாதிபதி டிட்டோ அளித்த விருந்துபசாரமொன்றில், இந்திய ராஷ்டிரபதி டாக்டர் ஹுசெயின் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்டார்.

## பூநகரி மக்கள் கஷ்டம்

யாழ்ப்பாணம், புதன்

கேரதீவு — சங்குப்பிட்டி மகாதேவாக் கடலில் இன்னமும் பாலம் போடப்படாமையால் பூநகரி மக்கள் தினமும் பெரும் கஷ்டமடைந்து வருகின்றனர்.

இப்பாலம் கட்டுவதற்காக அத்திவாரக்கல் நாட்டப்பட்டு பலகாலமாகியும் இன்னமும் வேலைகள் ஆரம்பிக்கப்படாதிருப்பது மக்களுக்கு பெரும் அதிருப்தியளித்துள்ளது.

இப்பாலத்தை விரைவில் கட்டுவதற்கு ஏற்ற நடவடிக்கை எடுக்குமாறு காரி பிரதமருக்கு பூநகரி கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் திரு கே. தனபாலசிங்கம் சங்கசார்பில் மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார். [ந. நி]

## 'மாவட்ட நீதிபதியை உடன் நியமிக்கவும்'

யாழ்ப்பாணம், புதன்

'யாழ்ப்பாணத்தில் மாவட்ட நீதிபதியை உடனடியாக நியமிக்கவும். அன்றேல் பதிலாக ஒருவரை உடன் நியமிக்கவும். வழக்காளிகள் கஷ்டப்படுகிறார்கள்' என்று யாழ்ப்பாண வழக்கறிஞர் சங்க பதில் தலைவர் அட்வகேட் பொன்னம்பலம் நீதி பரிபாலன சேவைக் கமிஷனை தந்தி மூலம் கோரியிருக்கிறார்.

யாழ்ப்பாண மாவட்ட நீதிபதியாகக் கடமையாற்றிய திரு. என். ஏ. டி. எஸ். விஜயசேகரா அசைல் கமிஷனராகப் பதவியேற்றிருப்பதாலேயே இத்தந்தி அனுப்பப்பட்டுள்ளது.

[illegible] யினர் எப்போதும் ஆயத்தமாகவிருக்கின்றனர் என்று அவ்வறிஞர் கூறினார்.

# ரொடீஷியாவுக்கெதிராகப் புதிய தடைகள்

லண்டன், ஜுன் 11

சட்டவிரோத ரொடீஷிய ஆட்சிக்கெதிராகபிரிட்டன், பல புதிய தடைகளை விதித்துள்ளது. ஐ. நா. பாதுகாப்புச்சபைத் தீர்மானங்களின் அடிப்படையிலேயே பிரிட்டன் இப்புதிய தடைகளை விதித்திருக்கிறது.

ரொடீஷியாவுடனான எல்லா ஏற்றுமதி, இறக்குமதிகளுக்கும் பிரிட்டன் தடைவிதித்துள்ளது.

சட்டவிரோத ரொடீஷிய ஆட்சியுடன்தொடர்புவைக்கும் எவருக்கும் பிரிட்டன் வருவதற்கு அனுமதி அளிக்கப்படமாட்டாது.

# 1465 ஆசிரியர்களுக்கு நாட்டில் பற்றுக்குறையாம்

உடுப்பிட்டி, செவ்.

"இலங்கையில் நாடு பூராவும் ஒருலட்சத்து 17 ஆயிரம்ஆசிரியர்கள் உள்ளனர். இவர்களில் தமிழ் ஆசிரியர்கள் 16ஆயிரம்பேர். [1] கண்டியில் 68 ஆசிரியர்கள் பற்றுக்குறையாகஉளளனர். 1960-65-ம் ஆண்டில் இப் பற்றுக்குறை ஏற்பட்டது. இன்னும் 400 ஆசிரியர்கள் இடம்பெறவேண்டும். 1465 ஆசிரியர்களுக்குப் பற்றுக்குறை ஏற்பட்டுள்ளது.

1440 பிள்ளைகளுக்கு 175 மாணவ ஆசிரியர்கள் வீதம் நியமிக்கப்பட்டுள்ளனர். 1956-ம் ஆண்டு 8 தமிழ்ப் பாடசாலைகளில் 8 சிங்கள ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். சிங்களப் பகுதிகளிலுள்ள தமிழ்ப் பாடசாலைகளிலேயே சிங்கள ஆசிரியர்கள் இடம்பெற்றனர். இடமாற்றங்கள்பிள்ளைகளின் கல்வியைப் பாதிக்கும். தொடர்ந்துஒரே பாடசாலையில் ஆசிரியராக இருந்தால்தான் தொடர்ந்த கல்வியினால் மாணவர்கள் சித்தி பெறலாம்"

மேற்கண்ட தகவலைஅகில இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் திரு. குமாரசாமி கரவெட்டியில் உடுப்பிட்டி எம். பி. யும், உபசபாநாயகருமான திரு. எம். சிவசிதம்பரத்திற்கு அளிக்கப்பட்ட வரவேற்பொன்றில் வெளியிட்டார்.

# "சைவத்தின் தூண்களில் ஒன்று சங்கீதம்"

உடுவில், திங்கள்

'சைவசமயத்தை அழிப்பதற்கு பல இசைகளாலும் பல முறை முயலப்பட்ட போதிலும் சைவம் அழியவில்லை. இதற்குக் காரணம் சைவமதம் ஏராளமான தூண்களாலும் வேன்று கோல்களாலும் பின்னிப் பிணைக்கப்பட்டுள்ளமை தான். இவ்வகைப்பட்ட தூண்களில் ஒன்றுதான் சங்கீதம். சங்கீதம், நாட்டியம் போன்ற கலைகள் சைவமதத்திற்கே உரியன. அவற்றை பேணிக்காப்பது நமது தலையாய கடமை'

இணுவில் சிவகாமி அம்மன் சந்நிதியில் நடைபெற்ற கர்நாடகசங்கீதஅரங்கேற்ற நிகழ்ச்சிகளுக்கு தலைமைவகித்து உரை நிகழ்த்திமயாழ்ப்பாண மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு தி.முருகேசபிள்ளை மேற்கண்டவாறு கூறினார்.

சங்கீத ஆசிரியர் கர்நாடக லயஞான நிதி திரு. ச. சுப்பையாபிள்ளையின்சிஷ்யர்களான செல்வன் இ.விக்னேஸ்வரராசாவின் மிருதங்க அரங்கேற்றமும் சகோதரிகள் செல்வி கமலாஜினி. இவ்யலட்சுமி அவர்களின் கர்நாடக வாய்ப்பாட்டு அரங்கேற்றமும் நடைபெற்றன.

## விரக்தி: அதனால் தற்கொலை

கோப்பாய், செவ்.

வாழ்க்கையில் விரக்தியுற்ற நிலையில் கிருமிநாசினி அருந்தித் தற்கொலைசெய்த பரிதாப சம்பவமொன்று கோப்பாய் தெற்கில் நடைபெற்றுள்ளது.

கோப்பாயைச் சேர்ந்த சுந்தரமூர்த்தி சரவணபவன் (31 வயது) என்னும் நபரே மேற்படி மரணத்துக்குள்ளானவராவார்.

இறந்தவரின் மனைவி பிள்ளைகள் ஆகியோரின் சாட்சியங்களையடுத்து விசாரணை நடத்திய மரணவிசாரணை அதிகாரி திரு அல்பிரெட் துரையப்பா தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

## 10-ல் தெரிவு

அளவெட்டி, செவ்.

மயிலிட்டி கிராமசபைத் தலைவர் தெரிவு அடுத்த மாதம் 10-ம் திகதி நடைபெற இருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்க்கட்சி போக்கு பற்றி வட்டுக்கோட்டை எம். பி

அராலி, செவ்வாய்

"மாவட்டசபை பற்றிய வெள்ளை அறிக்கை பாரலிமெண்டில் சமர்ப்பிக்கப்பட்டபோது, எதிர்க்கட்சியினர் கேவலமாக நடந்து கொண்டது நாடறிந்ததே. இதன் பின்னரும் தமிழ்மக்களில் சிலர் தொடர்ந்தும் எதிர்க்கட்சி கூட்டணிக்கு ஆதரவு காட்டுவார்களானால், அதுபற்றி விமர்சிப்பதற்கு வார்த்தையே கிடையாது" என்று வட்டுக்கோட்டை எம். பி.யும், தமிழரசுக்கட்சிப் பொதுச் சயலாளருமான திரு. அ. அமிர்தலிங்கம் கூறினார்.

வட்டுக்கோட்டை நாகேந்திர மடம் உபதபால் நிலைய தொலைபேசி இணைப்புத் திறப்பு விழாவில் வட்டுக்கோட்டை எம். பி. பேசினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"நானும் எனது கட்சியும் சிறுபான்மைத் தமிழர்களுக்குள்ள சமூகக் குறைகளை முற்றாக நீக்குவதற்காகத் தொடர்ந்து போராடுவோம். அச்சுவேலி குடியேற்றத் திட்டம் இத்துறையில் எமது ஆரம்ப முயற்சி. எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் மாற்றுக் கட்சியினர் நாம் பெரும்பான்மை மக்களுக்கு துரோகம் இழைத்து வருவதாகப் பிரசாரம் செய்வார்கள் என்பதை நான் உங்களுக்கு முன்கூட்டியே கூறி வைக்க விரும்புகிறேன். இன்று அராலி மக்கள் சாதி சமய பேதமின்றி வாழ்வதைக் கண்டு பெருமிதம் அடைகின்றேன். தமிழ்மக்கள் எவ்விதம் ஒருமைப்பட்டு வாழவேண்டும் என்ற எமது கட்சியின் குறிக்கோள் இந்தக் கிராமத்தில் தான் முதன்முதலாக வித்திடப்பட்டிருக்கிறது.

திரு. க. சுப்பிரமணியம் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

# "அமைச்சருக்குத்தெரியாமல் இந்தஅநீதிநடந்திருக்காது"

## வீட்டு வாடகை உயர்த்தப்பட்டதற்கு யாழ். எம். பி. கண்டனம்

யாழ்ப்பாணம், புதன்

"உள்ளூராட்சி அமைச்சருக்குத் தெரியாமல் இந்த அநீதி நடந்திருக்கமாட்டாது. ஒரு மாத காலத்திற்கு முன்னர் அமைச்சர் திருச்செல்வத்திடம் இது பற்றி நான் கேட்டபோது அப்படியொன்றும் நடக்கமாட்டாது என்று தெரிவித்தார். ஆனால் வாடகை உயர்த்தப்பட்டுவிட்டது. அமைச்சரின் சிபார்சு இன்றி இந்த வேலை நடந்திருக்க முடியாது" என்று யாழ்ப்பாணம் எம். பி.யும், தமிழ்க்காங்கிரஸ் தலைவருமான திரு ஜி. ஜி. பொன்னம்பலம் யாழ்ப்பாணம் குருநகரில் நடைபெற்ற ஆட்சேபக் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

குருநகர் றெக்ளமேசன் சனசமூகநிலையத்தில் டாக்டர் ஏபிரகாம் கனியூட் தலைமையில் [றெக்ளமேஷன்] வீட்டு வாடகை உயர்த்தப்பட்டதை ஆட்சேபித்து நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையிலேயே திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு ஜி. ஜி. பொன்னம்பலம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

யாழ். மாநகரசபை ஆணையாளர் ஆட்சியில் மக்களின் குறைகளையும், நகரம் சம்பந்தமாக எடுக்கப்படும் நடவடிக்கைகளையும் யாழ். நகரத்தின் எம். பி. என்ற முறையில், என்னிடமும் யோசனைகேட்டு முடிவுஎடுப்பதே முறையானதாகும். ஆனால் அப்படியொன்றும் கேட்கப்படவில்லை. அமைச்சின்சர்வாதிகாரப் போக்கை முறியடிக்க எல்லாரும் ஒற்றுமைப்பட்டு உயர்த்தப்பட்ட வீட்டு வாடகையைக் கட்டக்கூடாது. மாநகர சபை உங்களுக்கெதிராக வழக்குத்தொடர்ந்து உங்களைச் சிறைக்கு அனுப்பினால், உங்களை மீட்க உங்களுக்கு எதிராக வாதாடத்தயாராக வுள்ளேன்.

திரு. வி. ஆனந்தசங்கரி பேசுகையில், வரி கட்டமாட்டோம் என்று கூறுவதுடன் வீடுகளை வரிகட்டுவோர்க்குச் சொந்தமாக்குங்கள் என்று கேளுங்கள்" என்றார். பலரும் பேசினர். [நநி]

# "தவறுக்காக மன்னிப்பு கோருவது அவமானம் அல்ல"

## திருக்குறள் மகாநாட்டில்பேச்சு

உடுப்பிட்டி, செவ்.

"திருக்குறள் மனித சமுதாயத்தின் அன்றாட வாழ்க்கை அனுபவங்களைப் படம் பிடித்துக்காட்டுவதோடு நாம் வாழவேண்டிய நல்லமுறையையும் போதிக்கின்றது. நாங்கள் செய்யும் தவறுகளுக்காக மன்னிப்புக் கோருவது அவமானம் அல்ல. மன்னிப்புக்கேட்பது மனத்திற்குச் சாந்தியளிக்கும்."


இவ்வாறு கருணையம்பதி இளைஞர் முன்னேற்றக்கழகத்தின் 12-வது திருவள்ளுவர் நினைவு விழா சரணவாய் உமைபாற் சுந்தோருக்காருமையில் அமைக்கப்பட்ட இராமநாதன் அரங்கில் நேற்று இரவு நடைபெற்ற போது முதல்நாள் நிகழ்ச்சிகளுக்குத் தலைமைவகித்துப் பேசுகையில் ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்தக் குருக்கள் கூறினார். ஆசிரியர் திரு முத்துவேலு வரவேற்புரை கூறினார்.

வித்துவான் திரு. க. கனகசபை பேசும்பொழுது வாழ வழிதெரியாது தவிப்பவர்கட்குத் திருவள்ளுவர் ஒருவழிகாட்டியாவாரென்றும், மனிதர்கள் விலங்குகளாக வாழாது தெய்வப் பண்புடன் வாழ வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

திரு. வ. பொன்னம்பலம் உரையாற்றுகையில், "அறத்தின் அடிப்படையில் தான் உலகம் இயங்கவேண்டும். ஆதிகாலம் முதல் சைவ நெறிகளில் நின்று உழைத்தவர்கள் நல்ல முறையில் வாழ சைவம் வழிவகுத்துள்ளது. ஜனப் பெருக்கம் அதிகரித்து வரும் இவ்வேளையில் எதிர்கால சந்ததிகளை நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும்" என்று சொன்னார்.

ஆசிரியர் திரு. க. ... பதிப்பிள்ளை பேசுகையில், "பண்டைக்காலத்தில்

(5-ம் பக்கம்பார்க்க)




எப்பயிர்க்கும் உய்வுண்டாம் உய்வில்
அப்பயிர்க்கு 'ஷெல்' பூச்சி நாசினி பயனை பாவிக்காரெனில்
AGENTS
ரேயல் டிஸ்பென்ஸறி
PHONE 397 JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யங்லயன்ஸ் கொழும்பிலும் இனிங்ஸால் வெற்றி

## புரட்சிதாசனின் அருமையானஆட்டம்

கொழும்பு, செவ். யாழ்ப்பாண சாம்பியனாகத் தெரியப்பட்ட யங்லயன்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கும், கொழும்பு களனியா விளையாட்டுக் கழகத்திற்குமிடையே நடைபெற்ற மென்பந்து கிரிக்கெட் போட்டியில் யங்லயன்ஸ் கோஷ்டி களனியா கோஷ்டியை இன்னிங்சாலும் 13 ஓட்டங்களாலும் வெற்றி பெற்றது.

களனியாக் கோஷ்டி முதல் ஆட்டத்தில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 88 ஓட்டங்களை எடுத்தது. இதில் டபிள்யூ. பெரேரா, என். பெரேரா, நீக்கிலஸ் ஆகியோர் முறையே 48, 20, 7 ஓட்டங்களைப் பெற்றனர். இச்சந்தர்ப்பத்தில் யங்லயன்ஸ் பந்தெறி வீரர்களான பென்னடிற், இம்மானுவல், லூயிஸ் ஆகியோர் 5, 3, 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பின் துடுப்பெடுத்தாடிய யங்லயன்ஸ் கோஷ்டி சகல விக்கெட்டுக்களை இழந்து 162 ஓட்டங்களைப் பெற்றது. இதில் புரட்சிதாசன் அருமையாக ஆடி 62 ஓட்டங்களைப் பெற்றார். மேலும் யோகேஸ்வரன், குணநாயகம், இம்மானுவல் ஆகியோர் முறையே 37, 29, 10 ஓட்டங்களைப் பெற்றனர். இச் சந்தர்ப்பத்தில் களனியாக் கோஷ்டி பந்தெறி வீரர்களான என். பெரேரா, டயஸ், சமரதுங்க ஆகியோர் முறையே 5, 4, 1 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

அதன்பின் துடுப்பெடுத்தாடிய களனியா கோஷ்டி தனது இரண்டாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 61 ஓட்டங்களைப் பெற்றது. இதில் நீக்கிலஸ் 15 ஓட்டங்களையும், லாக்பிறியஸ் 14 ஓட்டங்களையும் பெற்றனர். இச் சந்தர்ப்பத்தில் யங்லயன்ஸ் பந்தெறி வீரரான இம்மானுவல், தேவராசா, லூயிஸ், பென்னடிற் ஆகியோர் முறையே 5, 3, 1, 1 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இதனால் யங்லயன்ஸ் களனியாவை இன்னிங்ஸாலும் 13 ஓட்டங்களாலும் தோற்கடித்து சாம்பியன் பட்டத்தைக் காப்பாற்றிக் கொண்டது. இப் போட்டி வத்தளை செ. அந்தனீஸ் கல்லூரி மைதானத்தில் நடந்தது.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### புதன் 12-6-68

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

**344 மீற்றர் அல் 61 மீற்றர்**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 அதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

**344 மீற்றர் அல் 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர் கேட்டவை.

**344 மீற்றர் அல் 61 மீற்றர்**

மாலை 5-00 கல்விச்சேவை, 5-15 பிறந்தின வாழ்த்துக்கள், 5-30 ஞானமஞ்சரி,

இரவு 6-15 வீணை — ஆர். கிருஷ்ணமூர்த்தி, 6-45 பாவளம், 7-00 இராமசஞ்சிகை, 7-30 நேயர்கடிதங்கள், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 பல்கலைக்கழக மாணவருக்கான விரிவுரை, 9-45 கலைக்கோலம், 10-15 தேர்ந்தஇசை.


## இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி — பிளாசா — சைலன்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) — விஜயா (மட்டக்களப்பு) — ராஜ் (நீர்கொழும்பு)

ஸ்ரீகிருஷ்ணா (திருமலை) — விஜிதா (அட்டன்) — அயன் (மகிளுரி)

★ ஜெமினி கணேசன்

★ கே. ஆர். விஜயா

நாகேஷ், அசோகன், ராஜ்குமார், புஷ்பலதா, வி. கே. ராமசாமி, நாகையா

நடித்த

ஏ. வி. எம். புரொடக்ஷன்ஸ்

# ‘ராமு’

அன்னை, குழந்தையும் தெய்வமும், மேஜர் சந்திரகாந்த் ஆகியவற்றை அளித்த ஏ.வி.எம். புரொடக்ஷன்ஸ் அளிக்கும் ஜனாதிபதி பரிசு பெற்ற மற்றோர் உன்னத திரைவிருந்து. சென்னையில் நூறு நாட்களுக்குமேல் ஓடிய படம்.

இசை: எம்.எஸ்.விஸ்வநாதன் — டைரக்ஷன்: திருலோகசந்தர்


# மகாஜனா கல்லூரி விளையாட்டுப்போட்டி

## சாம்பியன்கள் விபரம்

குரும்பசிட்டி, செவ். தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி இல்லங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டுப் போட்டி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றபோது 632 புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட சின்னையா இல்லம் சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. மற்றைய மூன்று இல்லங்களான அருளம்பலம், சின்னப்பா, துரையப்பா இல்லங்கள் முறையே 620, 574, 396 புள்ளிகளைச் சுவீகரித்துக் கொண்டன. அணிவகுப்பு வெற்றிக் கிண்ணத்தை சின்னப்பா இல்லமும் அஞ்சலோட்ட வெற்றிக் கிண்ணத்தை சின்னையா இல்லமும் பெற்றுக் கொண்டன.

கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடந்த இப் போட்டிக்கு காங்கேசன்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் மாணிக்கம் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். திருமதி மாணிக்கம் வெற்றியீட்டிய வீரர்களுக்கு பரிசுகளை வழங்கினார். கல்லூரி அதிபர் திரு. ரி. கி. ஜெயரத்தினம் போட்டிக்குத் தலைமை வகித்தார்.

போட்டியில் பிரிவுச் சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டோர் விபரம் வருமாறு:

ஆண்கள் 12வயதுக்குட்பட்டோர்:- முரளீதரன்.

13 வயதுக்குட்பட்டோர்: மனோரஞ்சன்.

14 வயதுக்குட்பட்டோர்: குகேந்திரன்.

16 வயதுக்குட்பட்டோர்: சிறீபால வெங்காதரன், தருமேஸ்வரா,

17 வயதுக்குட்பட்டோர்: ராஜகாந்தன்.

பெண்கள் கீழ்ப்பிரிவு:- ஜெயக்கொடிதேவி.

மத்தியபிரிவு:- தனலட்சுமி;

மேற்பிரிவு:- நிர்மலாதேவி.

## தேங்காய் அடிப்போர்

யாழ்ப்பாணம், புதன். தேங்காய் அடிப்போரில் வீரர் ஏ. வீரசிங்கம் 183 தேங்காய்களை கூடுதலாக உடைத்து எதிர் தரப்பினரை அமோக வெற்றியீட்டினார். இவருக்கு உதவியாக வீரர்கள் தர்மலிங்கம், வீ. ரத்தினம் பங்குபற்றினர், எதிர்த்தரப்பில் வீரர்கள் எஸ். முத்துராசா, சாமுவேல், துரைரத்தினம் ஆகியோர் ஆடினர்.

யாழ்ப்பாணம் குருசோ வீதியிலுள்ள மைதானத்தில் நடந்த இப்போருக்கு திரு. ஐ. தம்பிராசா மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.


**வின்சர்**

ஜெமினி கணேசன் சாவித்திரி முத்துராமன் கே. ஆர். விஜயா நாகேஷ் நடித்த

**சீதா**

2வது வாரம்!

**ராஜா** (யாழ்ப்பாணம்)

தினசரி 2-30, 6-30, 9-30 போயா தினங்களில் 4 காட்சி

ஜெய்சங்கர்-கே.ஆர்.விஜயா நடிக்கும்

**முகூர்த்த நாள்**

**ராணி** (யாழ்ப்பாணம்)

ஜெய்சங்கர், பாரதி, சோ நடித்த

**நான் யார் தெரியுமா?**

**REGAL** JAFFNA

Daily at 4-45, 7-00 & 9-45 P. M.

VinceEdwards&CarolOhmart in

**CITY OF SIN**

**MANOHARA** JAFFNA

Daily 4-00, 7-00, 9-00

Horst Bochholz in

**FANNY**


## ஆலய உற்சவங்கள்

உடுப்பிட்டி, செவ். கரணவாய் தெற்கு கலட்டி தர்க்கைப்புலம் பிள்ளையார் கோவில் ரதோற்சவம் சென்ற சனிக்கிழமையும், தீர்த்தோற்சவம் ஞாயிற்றுக்கிழமையும் சிறப்பாக நடைபெற்றன.

ஃ ஃ ஃ

உடுப்பிட்டி, செவ். கரணவாய் தெற்கு கப்பூது, நுணுப்பாவளைக் காட்டுக் கந்தசாமியார் ஆலய வருடாந்த உற்சவம் சென்ற ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவத்துடன் முடிவடைந்தது.

ஃ ஃ ஃ

வல்வெட்டித்துறை, செவ். வல்வெட்டி வெளிற்பிள்ளையார் கோயில் வருடாந்த உற்சவம் சென்ற ஞாயிற்றுக்கிழமை ரதோற்சவத்துடனும், திங்கட்கிழமை தீர்த்தோற்சவத்துடனும் சிறப்பாக நடைபெற்றன.

## “ஜனநாயகத்துக்கு பெருந்தோல்வி”

உடுப்பிட்டி, செவ். “உலகம் இன்று கொடிய பாதையை நோக்கிச்சென்று கொண்டிருக்கிறது. இதற்குச் செனட்டர் றொபேர்ட் கெனடியின் கொலை ஒரு அத்தாட்சியாகும். உலகிற்கு வழிகாட்டியாக விளங்கும் அமெரிக்கா இன்று பழிச்சொல்லுக்கு ஆளாகி நிற்கின்றது.

றொபேர்ட் கெனடி கொலை செய்யப்பட்டது ஜனநாயகத்திற்கு ஏற்பட்ட பெருந்தோல்வியாகும்.”

இவ்வாறு வடமர் இலக்கிய வட்டக் கூட்டம் கரவெட்டி வாணிகலைக் கழக மண்டபத்தில் பண்டிதர் திரு. க. வீரகத்தி தலைமையில் நடைபெற்ற போது அவர் பேசுகையில் கூறினார்.

## தண்ணீர் பிரச்னை உடன் தீரும்!

அளவெட்டி, செவ். ‘காரைநகரில் நிலவிவரும் தண்ணீர் பிரச்னை உடன் நீங்கும்’ என்று காரைநகர் சேவாநல அபிவிருத்திச்சங்கம் நீர்ப்பாசன அமைச்சரைக் கோரும் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

காரைநகர் சேவாநல அபிவிருத்திச்சங்கம் காரைநகரி முன்னேற்றத்தையும், மின்சாரம், தண்ணீர் பிரச்னைகளையும் ஆராய்வதற்கென ஒரு பொதுக்கூட்டத்தைக் கூட்டியது. காரைநகர் வடக்கு சுப்பிரமணிய வித்தியாலய மண்டபத்தில் காரைநகர் இந்துக் கல்லூரி அதிபர் திரு. ஏ.

## வரி விளம்பரம்

### தேவை

கணக்கெழுதும் திறமையும், கடை அனுபவமுமுள்ள ஒருவர் தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வரவும். ஆ. ச. சங்கரப்பிள்ளை அன் பிறதர்ஸ், 166, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 1554

“நல்ல உடற்கட்டுள்ள சமாராகப் படித்த வாலிபர்கள் சாயத் தொழிற்சாலைக்கு உடனே தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரிலே சமூகந்தரவும். உரிமையாளர், லோட்டஸ் சாயச்சாலை, புதுச்செம்மணி வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம். 1557

### தவறிவிட்டது

இலக்கம் P 707756— P 707761 முடிய உள்ள ஆறு அதிர்ஷ்டச்சீட்டுப் புத்தகங்கள் ரூபா 20/- பணத்துடன் ஸ்ரான்லி றோட்டிலுள்ள C. W. E. புடவைக் கடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ‘ஈழநாடு’ காரியாலயத்தில் ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். 1558

### பிரபல சோதிடம்

| | |
|---|---|
| ரேகை பலன் ரூபா | 2/- |
| சாதக பலன் ரூபா | 3/- |
| ஆரூடப் பலன் ரூபா | 1/- |

S. சிவகுருநாதன், 160, அரசடி றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். 1362

### விற்பனைக்கு

லிஸ்ற்றர் வாட்டர் கூல் 38 HP 4 சிலிண்டர் டீசல் இயந்திரம் Acpc 342 KW ஜெனரேட்டருடன் விற்பனைக்குண்டு. A.S. ராசநாயகம், செவ்வந்தி மோட்டார் வொர்க்ஸ், 6 ஸ்டான்லிவீதி, யாழ்ப்பாணம். 1553

## ‘அறிவகமாகத் திகழவேண்டும்’

அளவெட்டி, செவ். ‘இன்றைய மயிலிட்டி மக்களின் அறிவு வளர்ச்சிக்கும் எதிர்கால சந்ததியினரின் அறிவு வளர்ச்சிக்கும் வழிவகுக்கும் நிலையமாக உங்கள் வள்ளுவர் அறிவகம் திகழ வேண்டும். மயிலிட்டி மக்களின் அறிவு வளர்ச்சிக்கு மாத்திரமல்லாது நம் பட்டினசபைக்குட்பட்ட கிராம மக்களினதும் அறிவுவளர்ச்சிக்கு இந்நிலையம் பாத்திரமாக அமையவேண்டும்.’

இவ்வாறு காங்கேசன்துறைப் பட்டினசபைத் தலைவர் திரு. ஏ. வி. சதாசிவம் மேற்படி நிலைய அத்திவாரக்கல் நாட்டுவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் கூறினார்.

மன்றக்காப்பாளர் திரு. அழகரத்தினம் தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

## தவறுக்காக ......

[4ம் பக்கத் தொடர்ச்சி]

தமிழரிடையே காதல், வீரம் ஆகியவையே பிரிவை ஏற்படுத்தின. புலால் உண்ணுவது கொடுமையானதென அனைவரும் உணர்ந்து புலால் உண்ணுவதை நிறுத்தவேண்டும் என்பதுகுறளின் வஞ்சியம். இதனையே ஆறுமுகநாவலரும் வற்புறுத்தியுள்ளார். இளைஞர்கள் தங்கள் பெற்றோர் புகைமூட்டத்திற்காக நடந்துகொள்ளவேண்டும்” என்று கூறினார்.

தென்புலோலியூர்ப் பண்டிதர் திரு. வீ. பரந்தாமனும் பேசினார்.

தியாகராசா தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இரட்டைத்தட்டு பஸ்ஸில் பிரசவம்

முள்ளியவளை, செவ். ஓடும் பஸ்ஸில் பெண்மணி யொருவர் பிரசவித்தார். இச்சம்பவம் முல்லைத்தீவுப் பகுதியில் நடைபெற்றது. நாயாற்றிலிருந்து முல்லைத் தீவுக்குச் சென்று கொண்டிருந்த முல்லைத்தீவு இ. போ. ச. வின் உபடிப்போவைச் சேர்ந்த 'டபிள்டெக்கர்' பஸ்ஸிலேயே இப்பிரசவம் நிகழ்ந்தது. அளம்பில் என்னுமிடத்தில் பஸ்ஸில் ஏறிய பிரஸ்தாப கர்ப்பிணி முல்லைத்தீவு ஆஸ்பத்திரிக்கு டிக்கெட் எடுத்ததாகவும் பஸ் சில மைல் தூரம் சென்றதும் பிரசவ வேதனை ஏற்பட்டதாகவும் சில நிமிடங்களில் பெண்மணி பஸ்ஸினுள் பிரசவித்ததாகவும் பிள்ளையும் தாயும் சுகமாக வீடு திரும்பியதாகவும் அறியப்படுகிறது.

இப்பிரசவத்தினால் பஸ் பலமணி நேரம் தாமதித்த பின்னரே புறப்பட்டது. [உடுப். நி]

நாவாந்துறைக் காட்டில்

# அழுகிய மனிதசடலம் மரத்தில் தொங்கியது

யாழ்ப்பாணம், செவ். அழுகிய நிலையில் மனித சடலம் மரத்தில் தொங்கிக் கொண்டிருந்தது. தகவல் கிடைத்ததும் ஸ்தலத்துக்கு விரைந்த பொலிஸார் சடலத்தை அடையாளம் காண முடியாது அவதியுற்றுள்ளனர்.

கிராமசேவையாளர் ஒருவரது இரகசியத் தகவலைத் தொடர்ந்தே யாழ்ப்பாணம் பொலிஸார் இச்சடலத்தைக் கண்டுபிடித்தனர். நாவாந்துறைப் பகுதியில் சிறுகாட்டொன்றிலுள்ள ஒரு மரத்தில் இச்சடலம் தொங்கிக் கொண்டிருக்கப் பொலிஸார் கண்டனர்.

சடலம் அழுகிய நிலையில் அடையாளம் காணமுடியாமலிருந்ததால் இறந்தவர் ஒரு மாதத்துக்கு முன்னர் இறந்திருக்கலாமெனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

யாழ்ப்பாணம் குற்றத் தடுப்புப் பொலிஸ் பகுதி சார்ஜண்ட் திரு. கனகரத்தினம் புலன்விசாரணையை மேற்கொண்டுள்ளார். [கா. நி]

விமானசேவை

## வெள்ளிக்கிழமைகளில் ஒரு மாற்றம்

அளவெட்டி, செவ்வாய். வெள்ளிக்கிழமைகளில் பலாலி—திருச்சி விமான சேவை நேரத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

தற்போது பலாலி—திருச்சி விமானசேவைகள் வெள்ளிக்கிழமை தவிரமற்ற நாட்களில் காலையில் நடைபெற்று வந்தது. ஆனால் வெள்ளிக்கிழமைகளில் மாத்திரம் மாலையில் சேவை நடைபெற்று வந்தது.

ஆனால் தற்போது வெள்ளிக்கிழமைச் சேவையும் ஏனைய நாட்கள் போல்இனி காலையில் நடைபெறும்.

சிங்கள மொழி தேர்ச்சி

## கால எல்லையை நீடிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், செவ். தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கும், கூட்டுத்தாபன ஊழியர்களுக்கும் சிங்கள மொழியில் தேர்ச்சி பெறக் கொடுக்கப்பட்ட கால எல்லை போதாமையால் இதனை 7 வருடமாகக் கூட்ட வேண்டும்.

இத்தீர்மானம் நேற்று நடைபெற்ற அகில இலங்கை ஐக்கிய தொழிற்சங்க சம்மேளனத்தினதும், இலங்கை தேசிய அரசாங்க சேவையாளர் சம்மேளனத்தினதும் கூட்டுச் சம்மேளன பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. வேறு பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. [கா. நி.]

## தம்பிரான் சுவாமிகள்

அளவெட்டி, செவ். நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் நேற்று முன்தினம் பலாலியிலிருந்து விமானத்தில் இந்தியா சென்றார்.

பலாலி விமான நிலையத்தில் பல பிரமுகர்களும் கூடி நின்று இவரை வழியனுப்பி வைத்தார்கள்.

மதுரை ஆதீனத்தின் அழைப்பை ஏற்றுச் சென்றுள்ள இவர் அவ் ஆதீனத்தில் 45 தினம் ராமாயண விரிவுரை நிகழ்த்துவார்.

## காரைநகர் புதிய தபால் நிலையம்

யாழ்ப்பாணம், புதன். காரைநகரில் புதியதபால் நிலையத்துக்கான கட்டடம் விரைவில் அமைக்கப்படும்.

தபால் இலாகாவிலிருந்து காரைநகர் முன்னேற்றச் சங்கத்துக்குக் கிடைத்த பதிலொன்றில் இத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காரைநகர் முன்னேற்றச் சங்கம் சுகாதார அமைச்சரினால் அடிக்கல் நாட்டப்பட்ட புதிய தபால் நிலையம் சம்பந்தமாக என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறது? என்று கேட்டு எழுதிய கடிதத்துக்குப் பதிலாக தபால் இலாக்காவிலிருந்து கிடைத்த கடிதத்தில் புதிய தபால் நிலையம் கட்டுவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து விபரமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

## இன்று

உடுவில் புதன். இணுவில் ஸ்ரீ அம்பலவாண கந்தசுவாமி கோவிலின் மஞ்சத்திருவிழா இன்று நடைபெறும்.

மேற்படி மஞ்சத்திற்குரிய புதிய அச்சிரும்பு பிரபல வர்த்தகர் திரு. எஸ். சின்னத்துரையின் உதவியுடன் உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் அண்மையில் பொருத்தி வைத்தது குறிப்பிடத்தக்கது.

## இன்றைய பலன்

[12 - 6 - 68]

வைகாசி ௴ 30 ௳

புதன்கிழமை

திதி- துதியை இரவு 9-45 மேல் திருதியை.

நட்சத்திரம்- மூலம் காலை 6-30 மேல் பூராடம்.

ராகுகாலம் - 11-53—1-23.

சுபநேரம் - 4-23—5-53

இன்று பிறந்தவர்களுக்கு— உறவினர்களால் சில தொல்லைகள் தோன்றி மறையும். காணிப் பிணக்கில் மாட்டிக்கொள்ளாதிருத்தல் நன்று. கொடுக்கல் வாங்கல் விடயத்தில் மிகவும் கவனமாக இருக்கவும். வைத்தியர்கள் வாழ்க்கையில் பிரகாசிப்பதற்கு இடமுண்டு. சிலருக்கு வேதாந்த எண்ணம் தலைதூக்கலாம். கடந்தவைகளை நினைந்து வருந்தாமல் காரியத்தில் கண்ணாகவிருக்கவும். விடாமுயற்சியிருப்பின் வெற்றி உமக்கே.

மேஷம்- கடமைக்குப் பரிசு, காத்திருக்கும் விருந்து.

ரிஷபம்- அரசபயம், ஆயுதபீடை.

மிதுனம்- காதல்செய், கவலைகள் பறக்கும்.

கடகம்- எதிர்பாராத தொல்லை, சோர்வுமிகுதி.

சிம்மம்- பெரியோர் ஆசி, பெருமைகள் சேரும்.

கன்னி- இடமாற்றம் ஏற்படின் நன்மாற்றமாகும்.

துலாம்- வெற்றித் திருநாள், வீரவாழ்வு.

விருச்சிகம்- பணம்பறிபோகும், பாதுகாப்பு நன்று.

தனுசு- அடிசறுக்கும் ஆணவத்தை அடக்கு

மகரம்- வார்த்தை ஜாலம் வசீகரப்பார்வை.

கும்பம்- மோசடி நடக்கும், விழிப்புடன் இரு.

மீனம்- திடீர் வரவு, திகைக்கவைக்கும் உறவு.

— சோதிடக் கலாநிதி —

திருமலை வேலுப்பிள்ளை

## கடைக்குச் சென்றவர் வீதியில் துடிதுடித்து விழுந்தார்

யாழ்ப்பாணம், புதன். தேனீர்க் கடைக்குள் தேனீர் குடிக்கச் சென்றவர் அங்கு நச்சுத்திராவகம் அருந்தினாராம். கடைக்கு வெளியே வந்த அவர் வீதியில் துடிதுடித்து விழுந்தார்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் மரணமான சுப்பிரமணியம் [23 வயது] என்ற வாலிபரின் மரணம் சம்பந்தமாக நேற்று பொலிசார் நடத்திய விசாரணையின் போதே இவ் விபரம் தெரிவிக்கப்பட்டது.

ஆனைப்பந்தியிலுள்ள தேனீர்க் கடையொன்றிற்குள்ளேயே இவர் நச்சுத்திராவகம் அருந்தினாராம். திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. நா. இரசநாயகம் மரண விசாரணையை நடத்தினார். (கா. நி)

மரத்தில் தொங்கிய

அழுகிய சடலம்

## கொலையாக இருக்கலாம் எனச்சந்தேகம்

யாழ்ப்பாணம், புதன். நாவாந்துறைக் காட்டில் அழுகிய நிலையில் மரத்தில் தொங்கிக்கொண்டிருந்த மனித சடலம் தற்போது யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது

இறந்துகிடந்த இச்சடலம் அழுகிச் சிதைந்த நிலையிலிருப்பதால் இதனை அடையாளம் காணமுடியாது பொலிஸார் கஷ்டமடைந்தனர். இவர் கொலைசெய்யப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின்பேரில் தற்போது பிரேத பரிசோதனைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

சுமார் 5 அடி நீளமுள்ள இச்சடலம் எலும்புக் கூடும், சிதைந்த சதைத் துண்டுகளுமாக காட்சியளிக்கின்றது. பொதுமக்கள் இச்சடலத்தை அடையாளம் காணுவதற்காக யாழ்ப்பாணம் பொலிஸ்நிலைய சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் குற்றத் தடுப்புப் பொலிஸ் பகுதியினர் புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். [கா. நி.]

# யாழ்ப்பாணத்தில் மலாயா தூதுவர்

யாழ்ப்பாணம், புதன். இலங்கையிலுள்ள மலாயா தூதுவர் திரு இஞ்சா மொகமட் சோபி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ளார். இவர் இரு தினங்கள் இங்கு தங்குவார்.

இங்கு விஜயம் செய்துள்ள மலாயா தூதுவருடன் அவரது நிரந்தரக் காரியதரிசியான திரு. லிம்ஜிம் குவான், பத்திரிகை உத்தியோகஸ்தரான திரு. ஜபார், பிரதம காரியதரிசியான திரு காசாலிசெனுன் ஆகியோரும் வந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் பொதுஜனத் தொடர்பு அதிகாரி திரு செல்வநாயகத்துடன் இவர்கள் நேற்று காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை, கந்தரோடை புதை பொருள் ஆராய்ச்சி நிலையம், ஊர்காவற்றுறைப்பகுதி ஆகியவற்றிற்கு விஜயம் செய்துள்ளார்கள்.

இன்று காலை யாழ்ப்பாணத்திலுள்ள மலாயா இலங்கையர் சங்கத்திற்கு மலாயா தூதுவரும், அவரது குழுவினரும் விஜயம் செய்வார்கள். இலங்கையிலுள்ள மலாயா பென்சன்காரர்களுக்கு பென்சனில் ஒருபகுதி வெட்டப்பட்டது பற்றி இங்கு பேச்சுவார்த்தை நடத்தப்படும்.

மலாயா தூதுவரும், குழுவினரும் இன்று மாலை கொழும்பு திரும்புவார்கள். (கா. நி.)

## பாடசாலைகளில் இடநெருக்கடி

உடுப்பிட்டி, செவ். கரணவாய்தெற்கு மணியகாரன்தோட்டம் சைவப் பாடசாலையில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளதால் பிள்ளைகள் கஷ்டமடைந்து வருகின்றனர். 100 மாணவர்கள் மட்டுமே படிப்பதற்கு வசதியாயுள்ள இப்பாடசாலைக் கட்டிடத்தில் இப்பொழுது 250 மாணவர்கள் கல்வியயின்று வருகின்றனராம். இது சம்பந்தமாகப் பெற்றோர் ஆசிரியர் சங்கம் கல்வித்திணைக்களப் பகுதியினருக்கும், உடுப்பிட்டு எம். பி. திரு. மு. சிவசிதம்பரத்திற்கும் புகார் தெரிவித்து மகஜரை அனுப்பியுள்ளது.

## பண்ணிசை

உடுப்பிட்டி, செவ். நெல்லியடி மடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய வருடாந்த உற்சவத்தில் சென்றவியாழக்கிழமை இரவு தமிழகத்தைச்சேர்ந்த அருப்புகழ்மணி திரு. பி. எஸ். இராஜசேகரனின் தேவாரப்பண் இன்னிசைக் கச்சேரி நடைபெற்றது. இக் கச்சேரியை ஏராளமான அடியார்கள், பக்தி சிரத்தையுடன் கேட்டு மகிழ்ந்தனர். பெண்களும் அதிகமாகச் சமுகமளித்திருந்தனர்.

## அமைச்சர் திறந்துவைத்தார்

அராலி, செவ்வாய். வட்டுக்கோட்டை நாகேந்திரமடம் உபதபாற்கந்தோரில் அண்மையில் இணைக்கப்பட்ட தொலைபேசி தொடர்பை உள்ளூராட்சி அமைச்சர் திரு மு. திருச்செல்வம் ஆரம்பித்துவைத்தார்.

வட்டுக்கோட்டை எம். பி. திரு அ. அமிர்தலிங்கம், உள்ளூராட்சி உதவிஆணையாளர் திரு. முருகவேள், குழாய்நீர் தொழில்நுட்ப அதிபர் உட்பட பலர் இவ் வைபவத்தில் கலந்து கொண்டனர்,

## புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், புதன். யாழ்ப்பாணம் இந்து மகா சபை சனசமூகநிலையத்தின் புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: திரு. த. ஸ்ரீஸ்கந்தராஜா, உபதலைவர்; ம பாலச்சந்திரன், செயலாளர்: எஸ் பாலதிராஜா' உபசெயலாளர்; பி. யோகேந்திரன், பொருளாளர்: ஏ. வி மகாலிங்கம், உபபொருளாளர்: கே. நடராஜா, 15 பேர் கொண்ட நிர்வாகசபையொன்றும் தெரிவுப்பட்டது. [கா. நி]

## ஜி. வி. ஈ. ......

[1-ம் பக்கத் தொடர்ச்சி]
தொண்டு செய்வதற்கு ஏற்ற வசதிகள் செய்யப்படவேண்டும்'' என திருநெல்வேலி செங்குந்த இந்துக்கல்லூரிப் பெற்றோர்கள் பழைய மாணவர்கள் சார்பில், பிரஸ்தாப கல்லூரியில் உயர்தர விஞ்ஞான வகுப்பு வைப்பது சம்பந்தமாகக் கல்லூரி அதிபர் திரு. எஸ். பி நடராசாவுக்கு பெற்றோர் - ஆசிரியர் சங்கச் செயலாளர் திரு. சி. சிவரத்தினம் விடுத்துள்ள ஒரு வேண்டுகோளில் கேட்டுள்ளார். இவ்விஷயம் சம்பந்தமாக வடபிரதேசக் கல்வி அதிபரையும் நல்லூர் எம். பி. டாக்டர் நாகநாதனையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்துவதற்குப் பெற்றோர் - ஆசிரியர் சங்கம் தீர்மானித்துள்ளது.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு ஜூன் மாதம் 12-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org